**நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**முன்னிலை: திருமதி. S. கேத்ரின் ஜெப சகுந்தலா, BCA., LLB(Hons)., LLM.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, இராமநாதபுரம்.**
**நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்.**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

குற்ற பல்வகை மனு எண். 10/2026

TNRM12-000014-2026

மகரஜோதி,
C/o.தினேஷ்குமார்,
N.நாகநாதபுரம், புதுதெரு,
இராமநாதபுரம்.

... மனுதாரர் / முறையிடுபவர்

//எதிராக//

அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்,
இராமநாதபுரம்.

... எதிர்மனுதாரர்

1. தினேஷ்குமார்

2. சரஸ்வதி

3. திவ்யா

... எதிரிகள்

இந்த மனுவானது 12.01.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று (17.04.2026) இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்....

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 175(3) ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### (i) மனுவின் சுருக்கம்:–

1) மனு சாராம்சத்தின்படி, மனுதாரருக்கும் 1ம் எதிரிக்கும் கடந்த 27.01.2021ம் தேதி திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது வரதட்சணை கேட்டதின் பேரில், 13 பவுன் நகை மற்றும் மூன்று இலட்சம் மதிப்பிலான சீர்பொருட்கள் கொடுக்கப்பட்டது என்றும், திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரியின் வீட்டில் கூட்டுக்குடும்பாக வாழ்ந்து வந்தார் என்றும், திருமணத்தின் பயனாக 2 ஆண்குழந்தைகள் உள்ளார்கள் என்றும், பின்னர் 1ம் எதிரி அதிக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி வேலைக்கு ஏதும் செல்லாமல் வீட்டில் இருந்து கொண்டு குடிப்பதும், தொழில் தொடங்க போவதாக கூறி மனுதாரரின் பெற்றோரிடம் ரூ.50,000/– ரொக்கமாக பெற்றும், திருமணத்தின்போது வரதட்சணையாக வாங்கிய 13 பவுன் நகையை 1 முதல் 3 எதிரிகள் வாங்கி 2ம் எதிரியின் பெயரில் அடகு வைத்துள்ளனர் என்றும், ஆனால் தொழில் ஏதும் தொடங்காமல் அடகு வைத்த பணத்தினை குடித்து அளித்துவிட்டார் என்றும், மனுதாரர் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டால் 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து மனுதாரரை அசிங்கமாக பேசுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

2) இந்நிலையில் கடந்த 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் எதிரி வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு இரவு தாமதமாக வீட்டிற்கு வந்ததாகவும், ஏன் வேலைக்கு செல்லவில்லை என்று மனுதாரர் கேட்டபோது, 1ம் எதிரி மனுதாரரை ஏண்டி கண்டாரஓழி முண்டை என்னை கேள்வி கேட்கிறியா என்று அசிங்கமாக பேசி அடித்து சமையல் அறைக்குள்

அழைத்து சென்று சிலிண்டரை திறந்துவிட்டு உன்னை தீ வைத்து கொன்றுவிடுவேன் என திறந்த நிலையில் இருந்த சிலிண்டர் அருகே மனுதாரரின் முகத்தை வைத்து அமுக்கினார் என்றும், மேற்படி சம்பவம் குறித்து 2, 3 எதிரிகளிடம் கூறியதற்கு அவன் அப்படிதான் செய்வான், உன்னால் முடிந்ததை பார்டி கண்டாரஓழி முண்டை என்று அசிங்கமாகவும், இவளை அடித்து கொல்லுடா என்று 2, 3 எதிரிகள் பேசினார்கள் என்றும், இது குறித்து காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் அளித்தும், எந்த மாற்றமும் இல்லை என்றும், 1ம் எதிரியுடன் 2, 3 எதிரிகள் சேர்ந்து கொண்டு மனுதாரரையும், குழந்தைகளையும் வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டார்கள் என்றும், ஜூலை 2025 முதல் மனுதாரர் அவரது குழந்தைகளுடன் அவரது பெற்றோர் வீட்டில் கஷ்டஜீவனம் செய்து வருகிறார்கள் என்றும், 1ம் எதிரி, மனுதாரரையும், மனுதாரரின் பெற்றோரையும் கொலைமிரட்டல் விடுத்து, மனுதாரரின் வாட்ஸ்ஆப் எண்ணிற்கு கத்தியின் புகைப்படத்தையும், குரல்பதிவையும் அனுப்பி மனுதாரரையும், மனுதாரரின் குடும்பத்தாரையும் கொலை செய்வதற்கு கத்தி வாங்கியதாகவும் கூறி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் கூறியுள்ளார்.

3) மேலும் கடந்த 16.09.2025ம் தேதி மனுதாரரின் பெற்றோர் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், பின்னர் மீண்டும் பிளேடு கத்தியை வைத்து கடந்த 01.10.2025ம் தேதி மனுதாரர் தற்போது குடியிருக்கும் வீட்டில் மதுபோதையில் வந்த 1ம் எதிரி, மனுதாரர் அணிந்திருந்த உடைகளை கிழித்தும், கொடியில் காய்ந்த சில உடைகளை கிழித்தும், மதுபோதையில் கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், இது குறித்து கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், மேலும் மேற்படி 1ம் எதிரியின் செயல்கள் குறித்தும், மனுதாரரின் 13 பவுன் நகையை அடகு வைத்து திருப்பாத நிலையில், மேற்படி நகையில் கடந்த ஆகஸ்ட் மாதம் கூடுதலாக

ரூ.18,500/- மனுதாரருக்கு தெரியாமல் வாங்கியதால், 1 முதல் 3 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனு அளித்திருந்தார் என்றும், மேற்படி மனுவில் ஆஜரான எதிர்தரப்பினர் நகையை அடகு வைத்த பணத்தை ஒத்திக்கு வீடு பிடித்திருப்பதாகவும், மேற்படி வீட்டில் சீர்வரிசை பொருட்கள் இருப்பதாகவும், அதனை எடுத்தால் ஒத்தி பணத்தை பெற்று 13 பவுன் நகையையும் திருப்பி தந்துவிடுவதாகவும் சொன்னதின் பேரில் சீர்பொருட்களை எடுத்து கொண்டதாகவும், மேற்படி ஒத்தி பணத்தை பெற்ற எதிர்தரப்பினர் 2 ¼ பவுன் நகையை மட்டும் திருப்பி கொடுத்துவிட்டு மீதமுள்ள 10 1/3 பவுன் நகையை திருப்பி கொடுக்கவில்லை என்றும், மனுதாரரின் திருமண வாழ்விற்கும், குழந்தைகளுக்கும் எதிர்தரப்பினர் செய்த கொடுமைக்கும் எவ்வித முறையான விளக்கமும் அளிக்காமல் சென்றுவிட்டனர் என்றும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனு ரசீது மட்டும் அளித்த நிலையில் மேற்படி நபர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதனால் இது தொடர்பாக எதிரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்க இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு உத்தரவிடுமாறு கூறி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>(ii) பரிசீலனை:-</u>**

மனுதாரர் தனது மனுவுடன் புகார் மனு மற்றும் அது சம்மந்தமான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். மனு சங்கிதிகளை பரிசீலிக்கையில் மனுதாரருக்கும், 1ம் எதிரிக்கும் திருமணம் முடிந்து 2 ஆண்குழந்தைகள் உள்ள நிலையில், 1ம் எதிரி குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்து கொண்டு குடிப்பதும், தொழில் தொடங்க போவதாக கூறி மனுதாரரின் பெற்றோரிடம் ரூ.50,000/- ரொக்கமாகவும் பெற்றும், திருமணத்தின்போது வரதட்சணையாக வாங்கிய 13

பவுன் நகையை 1 முதல் 3 எதிரிகள் வாங்கி, 2ம் எதிரி பெயரில் அடகு வைத்து, தொழில் ஏதும் தொடங்காமல் அடகு வைத்து வாங்கிய பணத்தினை குடித்து அளித்துவிட்டார் என்றும், இது குறித்து மனுதாரர் கேட்டால் 1ம் எதிரியும், 2, 3 எதிரிகள் அசிங்கமாக பேசுவார்கள் என்றும், கடந்த ஜூலை 2025ம் வருடம் 1ம் எதிரி வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு, இரவு தாமதமாக வந்தகு குறித்து கேட்டதற்கு 1ம் எதிரி, மனுதாரரை ஏண்டி கண்டாரஓழி முண்டை என்னை கேள்வி கேட்கிறியா என்று அசிங்கமாக பேசி அடித்து சமையல் அறைக்குள் அழைத்து சென்று சிலிண்டரை திறந்துவிட்டு உன்னை தீ வைத்து கொன்றுவிடுவேன் என திறந்த நிலையில் இருந்த சிலிண்டர் அருகே மனுதாரரின் முகத்தை வைத்து அமுக்கினார் என்றும், மேற்படி சம்பவம் குறித்து 2, 3 எதிரிகளிடம் கூறியதற்கு அவன் அப்படிதான் செய்வான், உன்னால் முடிந்ததை பார்டி கண்டாரஓழி முண்டை என்று அசிங்கமாகவும், இவளை அடித்து கொல்லுடா என்று 2, 3 எதிரிகள் பேசினார்கள் என்றும், மனுதாரருக்கும், அவரது பெற்றோருக்கும் கொலைமிரட்டல் விடுக்கிறார் என்றும் கூறியுள்ளார்.

மேலும் கடந்த 01.10.2025ம் தேதி மனுதாரர் தற்போது குடியிருக்கும் வீட்டில் மதுபோதையில் வந்த 1ம் எதிரி, உடைகளை கிழித்து கொலைமிரட்டல் விடுத்ததால் இது குறித்து கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், மேலும் மேற்படி 1ம் எதிரியின் செயல்கள் குறித்தும், மனுதாரரின் 13 பவுன் நகையை அடகு வைத்து திருப்பாத நிலையில், மேற்படி நகையில் கடந்த ஆகஸ்ட் மாதம் கூடுதலாக ரூ.18,500/- மனுதாரருக்கு தெரியாமல் வாங்கியதாகவும், இது குறித்து 1 முதல் 3 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனு அளித்ததின் பேரில் ஆஜரான எதிர்தரப்பினர் நகையை அடகு வைத்த பணத்தை ஒத்திக்கு வீடு பிடித்திருப்பதாகவும், மேற்படி

வீட்டில் சீர்வரிசை பொருட்கள் இருப்பதாகவும், அதனை எடுத்தால் ஒத்தி பணத்தை பெற்று 13 பவுன் நகையையும் திருப்பி தந்துவிடுவதாகவும் சொன்னதின் பேரில் சீர்பொருட்களை எடுத்து கொண்டதாகவும், மேற்படி ஒத்தி பணத்தை பெற்ற எதிர்தரப்பினர் 2 ¼ பவுன் நகையை மட்டும் திருப்பி கொடுத்துவிட்டு மீதமுள்ள 10 1/3 பவுன் நகையை திருப்பி கொடுக்கவில்லை என்றும், மனுதாரரின் திருமண வாழ்விற்கும், குழந்தைகளுக்கும் எதிர்தரப்பினர் செய்த கொடுமைக்கும் எவ்வித முறையான விளக்கமும் அளிக்காமல் சென்றுவிட்டனர் என்றும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனு ரசீது மட்டும் அளித்த நிலையில் மேற்படி நபர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனு வாயிலாக தெரிய வருவதால், கொள்தகு குற்றத்திற்கு தேவையான அடிப்படை அம்சங்கள் மனுவில் உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இம்மனுவானது உரிய நடைமுறைகளை பின்பற்றி சரியான நேரத்தில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் கோரிக்கை ஏற்பதே சரியானது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>(iii) தீர்வு:–</u>**

முடிவில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு மற்றும் ஆவணங்களை நிலைய பொறுப்பு அலுவலர் இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும், இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் இதனை பெற்று முதல் விசாரணை (preliminary enquiry) மேற்கொண்டு அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டப்படி புலன் விசாரணை மேற்கொள்ள பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 175(3) ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (17.04.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.04.17 16:04:02 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்.